திரு. ச. சங்குமுத்து தேவர் : இந்த முருகன் கோயிலின் சிறப்பு பற்றி அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : முருகனுக்குள்ள சிறப்புத்தான் கோயிலுக்கும்.

திரு. ந. சோமசுந்தரம் : தமிழ்நாட்டில் ஏற்கெனவே கட்டியிருக்கும் கோயில்களுக்கே திருப்பணி செய்ய முடியாது சீரழிந்து இருக்கும் நிலையில் இப்போது புதிய கோயில் கட்ட வேண்டியது அவசியந்தானு என்று அரசு மறு பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அவசியம் என்று மக்களில் ஒரு பகுதியினர் கருதுகிறார்கள்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : பழமுதிர்ச் சோலையில் ஏற்கெனவே ஒரு கோயில் இருக்கிறது. அதற்குத் திருப்பணி செய்ய திரு. பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டதாக அறிகிறேன். அதற்கு அறநிலையம் அங்கிகாரம் கொடுத்திருக்கிறதா ? திருப்பணியை மேற்கொள்வது அந்தக் குழுவா அல்லது அறநிலையமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏற்கெனவே சில சட்டச் சிக்கல்கள் இருந்த காரணத்தால் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. சட்டச் சிக்கல்கள் தற்போது நீக்கப்பட்டு அறநிலையத் துறையே அந்த வேலையை எடுத்துச் செய்ய இருக்கிறதே அல்லாமல் யாருடைய தலைமையிலும் குழு அமைக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் வுரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(திருமதி ஜோதி வெங்கடாசலம்—தலைமை.)

2. பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : அடுத்து பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் முன் மொழியப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும்.

ஐந்து மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஒருவர் அதை முன்மொழிய வேண்டும். பின்னர் வழி மொழியப்பட வேண்டும். பின்னர் விவாதம் நடக்கும். பேரவைத் தலைவர் பற்றிய விவாதமாக இருப்பதால் விவாதம் உயர்ந்த முறையில்

[மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாஜலம்)]

நடக்க எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு திரு. கோவை செழியன் அவர்களை தீர்மானத்தை முன் மொழிய வேண்டுமென்று அழைக்கிறேன். மு ப 10 00

3. நடை முறைக் கேள்விகள்

(அ) பேரவைத் தலைவரைப் பதவி நீக்கம செய்யக்கோரும் தீர்மானம் விவாதிக்கப்படும்போது, அவருக்கு அவையில் ஒதுக்கப் பட்டுள்ள இருக்கை குறித்து உறுப்பினர்களுக்கு அறிவிக்காதது குறித்தும் இத்தீர்மானத்தின்மீது கருத்துக்கள் கூற முழு சுதந்திரம் அளிக்கப் படுமா என்பது குறித்தும்.

Dr. H. V. HANDE : Madam, on a point of order. In order to see that the debate is in perfect order, I would like to elicit information on two points from the hon. Chairman.

According to the Rules of the Assembly, whoever sits in the seat must be allotted a particular seat by the Hon. Speaker. Normally when a seat is allotted, we will get a communication the previous night. But till last night we have not received any communication from the Office of the Hon. Speaker the seat which is to be allotted to the Hon. Speaker and from where he is going to exercise his right of reply. This is one point.

The second point is whether full freedom will be given to the Members to express certain things. For instance, Members may express views as to how the Hon. Speaker has conducted the House and the way in which he has allowed or disallowed adjournment motions which are not normally allowed during the debate. The Chair should not suddenly say that these cannot be discussed. So, I request the Chairman to see that full freedom is given to Members to express their views. Only unparliamentary words can be expunged. These are the two points on which I want clarification from the Chairman.

(ஆ) பேரவைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யக்கோரும் தீர்மானம் தெளிவாக இல்லாதிருப்பது குறித்து.

Thiru K. KANDASAMY : Sir, on a point of order. Before proceeding with the discussion on the Resolution, I would like to know whether the Resolution is in order. According to the rules of procedure, the Resolution expressing want of confidence against the Chair, should be specific and clear. But it is very vague and not clear. . . . .